மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அப்படி யாராவது வைக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் உடனடியாக கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, கலைவாணர் அரங்கத்தின் முன்னாலேயே கலைவாணா அவர்களின் நினைவாக சிலை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கலைவாணர் அரங்கமே கலைவாணருக்கு நினைவுச் சின்னமாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அங்கே வேறொரு நினைவுச்சின்னம் தேவையில்லை என்பது அரசினுடைய கருத்து.

கோவை நகரததில் புறவழிச்சாலை.

* வினா எண். 225— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சா கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை உக்கடத்திலுள்ள வாலங்குளம் வழியாக, கோவை பாலக்காடு தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பேரூர் பாதை வரை குறுக்கு வழியாக (பை-பாஸ்)பாதை போடப்பட்டு, பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது ஏன் ?

(ஆ) மீண்டும் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) & (ஆ) இப்போதைக்கு தேவைப்படும் நிலத்தில் ஒரு பகுதியை தனியாரிடமிருந்து பெறவும் மற்றும் ஒரு பகுதி அரசு நிலத்தை உரிமை மாற்றம் பெறவும் கோவை நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தப் பணி முடிந்ததும் தான் நகராட்சி வேலையைத் துவக்கும்.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் போடப்பட்டு எவ்வளவு ஆண்டுக்காலம் ஆகிறது? நீண்டகாலமாக கிடப்பிலே போடப்பட்டிருக்கின்ற காரணத்தால் இதை உடனடியாக நிறைவேற்ற அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 5]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, இக்கேள்விக்குரிய பாதையின் மூன்று பகுதிகள் அங்கீங்கரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்கள் 9, 10 மற்றும் 11 ஆகிய மூன்று திட்டங்களிலும் அமைந்துள்ளது. இதற்கு தேவையான நிலத்தின் ஒரு பகுதியாக அரசு நிலத்தையும் இன்னொரு பகுதியாக தனியார் நிலத்தையும் எடுத்துக்கொண்டுவிட்ட பிறகு அந்தப்பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஆரம்பிக்கப்பட்ட காலம் பற்றிய தகவலோ, மதிப்பீடு பற்றிய தகவலோ, என்னிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடலூர் தொகுதியில் குடிசைப் பகுதிகள்.

* வினா எண். 226—திரு. கே. உச்சி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியில் எவ்வளவு குடிசை வாழ் மக்கள் உள்ளார்கள்?

(ஆ) அந்த மக்களுக்கு குடிநீர், பாதை, விளக்கு போன்ற வசதிகள் செய்து கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) 4347.

(ஆ) ஊராட்சிகளே தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன.

சென்னை நகராட்சிப் பகுதிகளில் கழிவுநீரகற்றுதல்.

*வினா எண். 227—திரு. டி. கே. கபாலி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை நகராண்மைக் கழக லாரிகளில் கொண்டு வரப்படும் கழிவுநீர் அடையாற்றில் விடப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS